10வது ஆண்டில்

விளம்பரம்
VLAMBARAM™

☎ (416) 282-8059
(416) 282-4978

# உலக தமிழோசை
ULAKA THAMILOSZAI

சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

நதி 10 MAY 01, 2000 பாலம் 09

❋ புதிதாக வீடு வாங்குபவர்களிற்கு சலுகைகள் (பக். 17)
❋ செவ்வாயிலிருந்து மனிதன் பூமிக்கு வந்தானா? (பக். 10)
❋ கமலின் நடிப்பில் சிவாஜியையும் காணலாம்? (பக். 7)
❋ மதம் மாறினால் நல்லது நடக்குமா? (பக். 5)
❋ வெளிச்சம் இல்லாமல் இரவில் பார்ப்பது எப்படி? (பக். 2)
❋ உதைபந்தாட்டச் சிகரம் யாராகலாம்? (பக். 6)
❋ ஒன்ராரியோவில் சிறந்த சாரதியாக? (பக்.13)
❋ உழைப்பால் உயர்பவர்கள்...... (பக். 15)


RE/MAX Crossroads Realty Inc., REALTOR
Independently Owned and Operated
வீடு வாங்க, விற்க
பூரண ஆலோசனை பெற
Raja M. Mahendran, P. Eng.
Sales Representative
MEMBER OF RE/MAX HALL OF FAME
MEMBER OF RE/MAX PLATINUM CLUB
(416) 491-4002
Pager: (416) 589-4270

இழந்த முடியை மீண்டும் பெற வாருங்கள்
சபோனாவிற்கு!
SABONA
& Gift
☎: (416) 264-8787 ☎: (416) 269-8151
2602 B Eglinton Ave. E., Scarborough

## அருள் விருந்து

-செ. சிவசுப்பிரமணியம்

☞ இம்மையிலும் மறுமையிலும் அச்சம் ஒன்றே சீரழிவுக்கு முதற் காரணமாகிறது துன்பத்தை விளைவிப்பது அச்சம், மரணித்தை விளைவிப்பது அச்சம், கேடுகள் அனைத்தையும் உண்டு பண்ணுவதும் அச்சம். அச்சத்துக்கு முதல் காரணம் யாது? நாம் தெய்வத்தின் பிரதிநிதிகள் என்பதை மறப்பதால் அச்சம் வருகிறது.

☞ உடல் எடுத்திருப்பவன் பரம் பொருளை முழுதும் தெரிந்து கொள்ள முடியாது முழுதும் தெரிந்தி கொள்ள வேண்டியது மில்லை. நம்மைக் குறியின்கண் கொண்டு செலுத்தப் பூரண விசுவாசம் போதுமானது

☞ நல்வினை யாற்றுகின்றவன் அந்த நல்வினையையே திரும்பத் திரும்பச் செய்யட்டும் நலத்தை அவன் நாடி நிற்கட்டும் நல்வினையினின்று இன்பம் உதிக்கிறது.

உலக நாடுகள் வரிசையில் தென் அமெரிக்க நாடுகள்

## ஆர்ஜென்தீனா (ARGENTINA)

தென் அமெரிக்காவில் உள்ள இரண்டாவது பெரிய நாடு " ஆர்ஜென்தீனா" ஆகும். "யுறுகுவே" [Uruguay], பிரேஸில் [Brazil], பராகுவே [Paraguay], போலிவியா [Bolivia], சில்லி [Chile]ஆகிய நாடுகளை எல்லையாகவும் இந்நாட்டின் கிழக்கு பகுதியின் அரைவாசி அத்திலாந்திச் சமுத்திரம் எல்லையாகவும் உள்ளது.

**பரப்பளவு:** 1,068,302 ச. மைல்கள்
**மக்கள் சனத்தொகை:** 33,100,000 பேர் (1992ஆம் ஆண்டு மதிப்பீட்டின் படி)
**தலைநகரம்:** 'பேர்னஸ் ஐரீஸ்' [Buenos Aires] (அத்திலாந்தி சமுத்திர கரையோரமாக உள்ளது)
**சுதந்திரம்:** யூலை 09, 1816இல் ஸ்பெயின் நாட்டு ஆதிக்கத்தில் இருந்து சுதந்திரம் பெற்றது
**மொழி:** ஸ்பனிஷ் [ உத்தியோக மொழி]
**சமயம்:** ரோமன் கத்தோலிக்கர் 66%

(தொடர்ச்சி 17 ம் பக்கம்)

## உன்னை அறிந்தால்

புதிய ஆண்டில, காலநிலை அரசியல மாறறஙகள் ஏற்படுகின்றது. நல்ல விஷயங்கள் நடக்கும் காலம் இது. ரொறொன்ரோவில் மேஜரிற்கான தேர்தல் காலமும் கிட்டுகிறது. ஏழுமாதங்களே இருக்கின்றன. அண்மையில் வெளிவந்த "நேசனல் போஸ்ட்' பத்திரிகை ஆனையிறவில் நடைபெற்ற வெற்றியைப் பற்றி எழுதியபோது கனடாவில் 200,000 தமிழர்கள் இருக்கின்றார்கள் என்பதனையும் கூறிவைத்துள்ளது. தேர்தல்கள் வரும்போது முகத்தைக் காட்டும் தமிழர்கள் மற்றைய காலங்களில் எங்குபோய் மறைந்து விடுகிறார்கள் யார் அறிவார்கள்? ஒவ்வொருவரிற்கும் தேவைகள் உண்டு. அதனை நிவர்த்திக்க வேண்டும். இதில் இரண்டு கருத்துக்கள் இல்லை. தேர்தலில் வென்று தன் தேவையைக் கவனிக்க எத்தனிப்பவர்களை ஆதரிப்பதில் தான் இரண்டு கருத்துக்கள் இருக்க வேண்டும். காலத்தின் தேவைகள் அதிகரிக்கின்றன. தமிழா் தொகைகளும் அதிகரிக்கின்றன. தமிழ் கதைப்பவர்களின் பிரதிநிதி தேவை என்பது உண்மை. இந்த தேவை பூர்த்தி செய்வதற்கு, ஒழுங்கான படிகட்டல் தேவை. பொதுநலத்தில் கூடுதலாக ஆர்வம் கொண்டவர்களும் தன் மனச்சாட்சிக்கு நேர்மையானவர்களையும் (மனச்சாட்சி உள்ளவர்கள்) பண்பாளர்களையும் நாம் தெரிவு செய்து அப்படியானவர்களை எமது பிரதிநிதிகளாக்கினால் அவரே ஒரு ஒழுங்கான தமிழ்ப் பிரதிநிதியாக இருக்கக் கூடும். **சிந்திப்போம்... செயல்படவோம், நாளை நமதே. வெற்றி நமதே!!**

-நெற்றிக்கண்ணன்

விளம்பர வினாடி வினா! CTBC RADIO ✡ SATUARYDAY ✡ 12.00 PM


SINGAPORE CELLUAR
$25.00 + Taxes 200min/Month
PAGER $5.95/Month Unlimited
$55.00 +Taxes / Month
7 a.m. - 7 p.m. 400min. இலவசம்
7 p.m. - 7 a.m. கிழமை நாள் இலவசம்
Fri. 7 p.m. - Mon. 7 a.m. இலவசம்
மேலதிக நிமிடம் 20 சதம் மட்டுமே
CANTEL
Bell Mobility
Mobile Message, Call Waiting, Call Display per second billing included.
மேலதிக விபரத்திற்கு சக்தி: (416) 745-2378
HOTLINE: (416) 980-1234

துரித பணமாற்றுச் சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கு கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
☎ (416) 267-8221


சிவாகம கிரியா பீடம்
☎: (416) 724-7480
திருமணம், பதுவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை கடை திறப்பு, லக்சுமி பூஜை சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜைகள் மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம் ஆயுஷ்ய ஹோமம் தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறையா? தலைஅலங்கார ஜோடனைகளா? ஜடை நாகம் ஆண்டாள் மாலைகளா? தலைப்பாகையா? பரத நாட்டிய அலங்கார ஆபரணங்களா? மற்றும் கல்யாண மண்டபமா? உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள். சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்) திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்
5 Greenleaf Terr., Scarborough, Ont.

VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
SCARBOROUGH, ONT. M1B 5P9, CANADA
TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978

# அறிவும் ஆக்கமும் (56)



-விஜே குலத்துங்கம்

தற்போது வெளிச்சத்தை வழங்க நாங்கள் மின்சாரத்தினால் எரியும் மின் விளக்குகளை உபயோகிக்கின்றோம். தற்போது சாதாரணமாக உபயோகிக்கும் மின் குமிழில் Tungsten - டங்கஸ்டன் எனனும் உலோகத்தால் செய்யப்பட்ட மெல்லிய கம்பிச் சுருள் ஒன்று இருக்கும் மின்சாரம் அதனூடாக பாயும் போது, கம்பி சூடாகி வெள்ளைத் தணலாகி, வெளிச்சத்தைக் கொடுக்கும். இந்த உலோகக் கம்பி எரிந்து விடாமல் இருக்க, மின் குமிழிலின் உள்ளே இருக்கும் காற்று வெளியேற்றப்பட்டு வெற்றிடமாக்கப்பட்டு பின்னர் சிறிதளவு சடத்துவ வாயு செலுத்தப்படும். இது உள்ளே எஞ்சியிருக்கும் சிறிதளவு ஒட்சிசனும், கம்பிச் சுருளை எரித்து விடாமல் தடுக்கும். ஆனால் காலம் செல்லச் செல்ல சடத்துவ வாயு முடிந்து விட, ஒக்சிசன் கம்பிச் சுருளை எரித்துவிடும். இதன் போது மின்குமிழ் இனிமேல் எரியாது சுட்டுவிட்டது எனக் கூறுகின்றோம்.

இந்த மின் குமிழ்களின் ஒரு முன்னேற்றமான அமைப்பு டியூப் லைற் எனப்படும் Fluroscent Light ஆகும். இவை சாதாரண மின் குமிழைவிட கூடிய வெளிச்சத்தையும், குறை அளவு மின்சாரத்தையும் எடுக்கும். அத்துடன் நீண்ட காலம் உபயோகிகக்கூடியதாகவும் இருக்கும். சாதாரண குமிழ் போல் இதில் கம்பிச் சுருள் கிடையாது. நீண்ட குழாயின் இரு முனையிலும் மின்சாரத்தைப் பாய்ச்சுவதற்கு அமைப்புகள் இருக்கும். உள்ளே சடத்துவ வாயுவான ஆர்கன் வாயும் மேர்க்குரி ஆவியும் காணப்படும். இதனாலேயே இவற்றை மேர்க்குரி விளக்கு என்றும் அழைப்பார்கள். முனைகளில் மின்சாரம் பாய்ச்சப்பட்டு சூடாக்கப்பட, இலத்திரன்கள் வெளிப்பட்டு, மேர்க்குரி அணுக்களுடன் மோதி, அவை கதிர்வீச்சை வெளிப்படுத்தச் செய்யும். இந்த கதிர் வீச்சின் அதிகமான பகுதி Ultra Violet ஊதா கடந்த கதிர்கள் ஆகும். இவை கண்ணுக்குத் தெரியமாட்டாது. கண்ணாடிக் குழாயின் உட்புறத்தில் இந்த ஊதா கடந்த கதிர்களை தெறிக்கச் செய்து ஒளிரப் பண்ணும் Calcium tungstate, Zinc sulfide, Zinc Silicate ஆகிய இரசாயனப் பொருட்கள் பூசப்பட்டிருக்கும். இவையே இந்த ஊதா கடந்த கதிர்களை ஒளிரச் செய்யும். இப்படியாக பூசப்பட்ட இரசாயன கலவைகளை மாற்றுவதன் மூலம் வெவ்வேறு நிறங்களை கொடுக்கும் டியூப் லைற்றுகள் தயாரிக்கப்படும். ஆரம்பத்தில் நீண்ட குழாய்களாக உருவாக்கப்பட்ட இந்த விளக்குகள் தற்போது சிறிய அளவு மின் குமிழ்களாகவும் வருகின்றன. ஆனால் இவை கூட குறிப்பிட்ட காலத்தின் பின் இயங்காமல் விட்டுவிடும். உள்ளேயிருக்கும் மேர்க்குரி வாயு தீர்ந்து விடுவதே இதற்கு காரணமாகும்.

தற்போது ஒரு தரம் புதிய மின்குமிழ் போட்டால், நிரந்தரமாக பழுதடையாமல், மாற்றவே தேவையில்லாத ஒரு மின்குமிழ் தயாரிக்கப்பட்டு உள்ளது. அத்துடன் மிகச் சிறிய அளவு மின்சாரமே பாவிக்கப்படும். Gallium Nitrade என்ற பதார்த்தம் ஏற்கனவே கொம்பியூட்டர் சிப்புகள் (Chips) தயாரிக்க உபயோகிக்கப்படுகின்றது. மற்றும் Led எனப்படும் Light Emitting Diodes களிலும் பாவிக்கப்படும். புதிய வகை மின் குமிழ்கள் இந்த Gallium Nitrade ஐ உபயோகித்து தயாரிக்கப்படுகின்றன. இந்த Gallium Chip சிறிதளவு மின்சாரம் வழங்கப்படுவதன் மூலம், மேற்பரப்பில் உள்ள இலத்திரன்கள் அருட்டப்பட்டு, ஒரு நீல நிற ஒளியை தோற்றுவிக்கும்... பின்னர் இந்த நீல ஒளி Photon reduction என்ற முறை மூலம் குமிழின் உள்ளே பூசப்பட்ட Phosphor மூலம் பிடிக்கப்பட்டு, கண்ணுக்கு தெரியக் கூடிய பிரகாசமான வெண்ணிற ஒளியை உண்டாக்கும். வெப்பமேற்றும் தேவை இல்லை என்பதால் சாதாரண மின் குமிழை விட 90% குறைவாகவே மின்சாரத்தை எடுக்கும்.

ஆரம்பத்தில் பெரிய விளம்பரப் பலகைகள், சிக்னல் விளக்குகள் போன்றவற்றில் தான் இவை உபயோகிக்கப்படும். முக்கியமாக தெருக்களில் உள்ள சிக்னல் விளக்குகளில் உள்ள மின் குமிழ்கள் 6 மாதங்களில் சுட்டுவிடும். ஒரு சிக்னல் விளக்கிலுள்ள மின்குமிழை மாற்ற 600 டொலர்கள் செலவாகும். ஆனால் இந்த Gallium மின் குமிழை போட்டு விட்டால் பின்னர் மாற்றவே தேவை இல்லை. இங்கிலாந்திலுள்ள லண்டன் மாநகரத்திலும், பிறிஸ்டல் நகரத்திலும் இந்த மின் குமிழ்கள் பாவனைக்கு வந்து விட்டன. அமெரிக்காவின் கொலராடோ மாகாணத்தில் உள்ள டென்வர் என்ற நகரத்தில் 13,000 சிக்னல் விளக்குகளில் இந்த புதிய மின்குமிழ்கள் பொருத்தப்பட்டு உள்ளன.

இவை மக்களின் பாவனைக்கு வர 5 - 10 வருடங்கள் எடுக்கும். இந்த மின்குமிழ்கள் சாதாரண குமிழ்களை விட பல மடங்கு விலையுள்ளது. மற்றைய விடயம் தற்போதுள்ள மின்குமிழ்கள் 120 வோற்றுகளில் எரியும். ஆனால் இந்த புதிய மின்குமிழ்களுக்கு 12 வோல்ற்றுகள்தான் தேவை. எனவே இந்த மின் விளக்குகளுக்காக புதிய வயரிங் செய்யப்பட வேண்டும். புதிய கட்டிடங்களில் இந்த முறை புகுத்தப்படலாம். ஏற்கனவே உள்ள கட்டிடங்களில் வோல்ற்றுகளை குறைக்க Stepdown transformer என்னும் மின்னிறக்க மின்மாற்றிகள் பாவிக்கப்பட வேண்டும். எனவே ஆரம்ப செலவு கூடுதலாக இருக்கும். ஆனால் பின்னர் செலவு இல்லை. மின்குமிழ் சுட்டுப் போகாததால் மாற்றத் தேவையில்லை.

சரி வெளிச்சத்திற்காக வெவ்வேறு விளக்குகளைப் பற்றி கதைக்கின்றோம். எதிர்காலத்தில் பூனை, நாய்கள் போன்ற மிருகங்கள் இரவில் பார்ப்பதற்கு இருக்கும் கண் வில்லைகள் போல், செயற்கையாக Contact lens தயாரித்து, கண்ணில் பொருத்திவிட்டால் இருட்டிலும் நாம் பார்க்கக் கூடியதான காலம் எதிர்காலத்தில் வர இருக்கின்றது. ஏற்கனவே இரவில் பார்ப்பதற்கு உதவியாக கருவிகள் உள்ளன. இவற்றை Night Vision Goggles என்பார்கள். பொலிஸ் இராணுவம் போன்றவை தற்போது இதை உபயோகிக்கின்றார்கள். இரவில் வேட்டை ஆடுபவர்களும், இரவில் விலங்குகளின் அசைவை அவதானிக்கும் உயிரியல் ஆராய்ச்சியாளர்களும் இதை உபயோகிக்கின்றார்கள்.

இந்த Night Vision Goggles கள் தொழிற்படும் போது சிறிய ஒளியானது, குறிப்பிட்ட கண்ணாடி வில்லையூடாக செல்லும்போது அதன் செறிவு அதிகரிக்கப்பட்டு செறிவாக்கப்பட்டு, ஒரு வெற்றிடத்திற்கூடாக சென்று ஒரு திரையில் பிரகாசமான பிம்பமாக விழும். இந்த விம்பத்தையே நாம் பார்க்கின்றோம். திரை அமைந்திருக்கும் அமைப்பு நாம் நேரில் பார்ப்பது போன்ற ஒரு தோற்றத்தை கொடுக்கும்.

தற்போது இந்த இரவில் தெரியக்கூடிய வில்லைகள் பொருத்தப்பட்ட கமெராக்களும் வீடியோ கமெராக்களும் விற்பனைக்கு உள்ளன. இவற்றின் மூலம் இரவிலும் வெளிச்சம் இல்லாமல் படம் பிடிக்கக் கூடியதாக உள்ளது.

***************************

*விஜே குலத்துங்கத்தின் "அறிவுக்கு வேலை கொடு" வானொலி நிகழ்ச்சியை CTR வானொலியில் ஒவ்வொரு செவ்வாய் க் கிழமை இரவு 9மணி க்கு கேட்டு மகிழலாம்.*

*******************************************************

"அறிவும் ஆக்கம்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் - 61 SCARFAIR PATHWAY, SCARBOROUGH, ONT. M1B 4G2 என்ற விலாசத்திற்கு அல்லது wijey@ interlog.com என்ற விலாசத்திற்கு E-Mail ஐ எழுதி அனுப்பவும்.


11 வருடங்களாக தமிழர் மத்தியில்

# யோகாஸ்

☎: (416) 267-0408

## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 107

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | 3 | ■ | |
| | ■ | ■ | | ■ | | ■ | |
| | ■ | ■ | | ■ | 4 | | |
| 5 | | 6 | | ■ | | ■ | 7 |
| | ■ | | ■ | 8 | | | ■ |
| ■ | 9 | | ■ | | ■ | | ■ |
| 10 | ■ | | ■ | | ■ | | 11 |
| | ■ | | | | | 12 | ■ |

**இடமிருந்து - வலம்**

1. புலிகளால் ஆனையிறவு தளம் கைப்பற்றப் பட முன்னர் கைப்பற்றிய இராணுவதளம்
4. உயர்த்து
5. பத்திரிகை
8. கணை
9. தொடக்கம்
11. பற்களை சூழ உள்ள தசை(வல-இட)
12. வசிக்கும் இடம் (வல-இட)

**மேலிருந்து கீழ்**

1. இராமாயணம் மகாபாரதம் இரண்டையும் சேர்த்து இவ்வாறு கூறுவர்
2. ஒரு கழுத்தணி
3. சிவப்புத் திலகம்
6. ஓவியம்

7. மணிமுடி (கீழ் - மேல்)
8. இன்புற்றிரு
10. கொடை
12. அங்கம் (கீழ் - மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் MAY 27, 2000க்கு முன்னர் விளம்பரம் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| து | வ | ர் | ப் | பு | ■ | கா | ■ |
| த் | ■ | ■ | ■ | த் | ■ | தை | பா |
| மு | கூ | ர் | த் | த | ம் | ■ | ண் |
| ■ | ப் | ■ | ■ | க | ■ | ப | டி |
| அ | பி | ன் | ■ | ம் | ■ | ■ | த் |
| க | டு | வ | ன் | ■ | சி | த் | தி |
| வ | ■ | ற | ■ | ■ | ■ | ■ | ய |
| ல் | ■ | ம | க | ர | ந் | த | ம் |

**#106இல் வெற்றி பெற்றோர்**

1)R. Nirmala, Mississauga, Ont.
2.L. Rangan, North York, Ont.

*இலங்கை, இந்திய, கனேடிய உணவுப் பொருட்கள் உடன் ஆட்டிறைச்சி, கோழி, மாடு, மீன், கணவாய் மற்றும் சகல விதமான உணவுப் பொருட்களுக்கும் நாடுங்கள்*



**உங்கள் குழந்தையின் எதிர்கால கல்வியில் ஒரு சிறு தொகையை முதலிடுவதுடன்**



கனேடிய அரசின் கல்விக்கான மானியம் $400 இலவசம்!

☆ TWO YEAR DIPLOMA program ஐ வெற்றிகரமாக முடிப்பதன் மூலம் சகல புலமைப் பரிசில்களையும் பெற முடியும்.

- அரச அங்கீகாரம் பெற்ற புலமைப் பரிசில் சேமிப்பு திட்டம்.(R.E.S.P)
- உலகின் எந்தப் பாகத்திலும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் கல்வி பெறலாம்.
- இன்னும் பல சலுகைகள் உண்டு.

இலவச ஆலோசனைகள் பெற எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு - சீலன் .A

**The Children Education Trust of Canada**

*Tel: (416) 451- 0271 pager: (416) 980-9836*

# APPLEMORE AUTOMOTIVE

Apple Apple Apple

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்


- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

SPECIAL



- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility




**Tel: (416) 285-4998**

**2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON**

Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple



## OODAM MAINTENANCE WORKS

Janitorial Services ("Sanitation for the Nation")



* KITCHEN RENOVATIONS
*BATHROOM REVOVATION
*TILES
*PLUMBING




>Railing >Fencing >Welding

Free Estimates

Pl. Call: Thamby - TEL./Fax: (416) **638-2796**

18 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5


## வாகனம் வாங்கும் போது Demo வாங்குவது சிறந்ததா?



வாகனம் வாங்கும்போது Demo வாகனங்களை
வாங்குவதால் பெரிய அளவிலான சேமிப்பை
சேமிக்க முடியும் என்று பலரும் நினைப்பது
உண்டு. ஆனால் பலருக்கு அதில் உள்ள நன்மை தீமைககள் புரிவதேயில்லை.
முக்கியமாக Demo என்றால் என்ன என்பது தெளிவாக தெரியாமையும் ஒரு
காரணம் என்று கொள்ளலாம். Demo என்றால் வாகனம் விற்க்கும் இடங்களில்
வேலை பார்ப்பவர்களுக்கு அந்தக் கம்பனியால் இலவசமாக கொடுக்கப்படும்
வாகனம் ஆகும். அவர்கள் எப்படிப் பாவித்தார்கள் என்பது உங்களுக்கு
தெரியப்போவதில்லை. அடுத்த விதமான Demo வாகனம் வாங்க வருபவர்கள்
ஓடிப் பார்ப்பதற்காக உள்ளது ஆகும். எத்தனை ஆயிரக்கணக்கானவர்கள்
அதை ஓடிப்பார்த்திருப்பார்கள். எப்படி எல்லாம் ஓடிப் பார்த்திருப்பார்கள்
என்பது முதலில் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

எல்லாவறையும் விட Honda, Toyota, Acura வாகனங்களில் Demo வுக்கும்
புதியவற்றிற்க்கும் பெரிய அளவில் எந்த விலை வித்தியாசங்கள் கிடையாது.
ஆனால் GM, Ford, Dodge போன்ற வாகனங்களில் பெரிய அளவில் சேமிக்க
முடியும். உங்கள் பணத்தில் பெரிய அளவில் செலவுசெய்வது வாகனங்களை
வாங்கும் போது சில நூறு டொலர்களை கூடுதலாக கொடுத்தாலும் நல்லதாக
வாங்கப்பாருங்கள். நான் Honda இல் வேலை செய்வதன் மூலம் கிடைக்கும்
அனுபவங்களை கொண்டுதான் இவைகளை இங்கு தந்துள்ளேன்.

மேலதிக விபரங்களுக்கு- **சோதீஸ்** *Cell (416) 704 -1179*


### நியூ மிலேனியத்தில் ஸ்காபரோவில் 9 வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க
வாகனத்திருத்த வேலைகளுக்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

**Also Air Conditioning Service & Repair**

## NTE AUTO INC.
New Trade Engineering

### என். ரி. இ. ஓட்டோ இங்க்

Contact: Sivabalan சிவபாலன்

**Tel: (416) 750 - 1573**

151 NANTUCKET BLVD., UNIT #12, SCARBOROUGH, ONT.



In New Millennium We are entering 9th year service in Scarborough



## கலைமகள் புத்தக நிலையம்

- *சிறுவர்களிற்கான நீதிக்கதைகள்
- *தமிழ்ப் புத்தகங்கள்
- *கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
- *இலங்கை/இந்திய பத்திரிகைகள்
- *குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்
- *CREDIT LEVEL தமிழ் பாடப்புத்தகங்கள்
- *கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல

**துரித பணமாற்றுச் சேவை**

594 PARLIAMENT ST.
TORONTO, ONT.
☎: (416) 921-5018

3238 Eglinton Ave., East
Scarborough, Ont.
☎: (416) 265-3605

3850 FINCH AVE. E.
GO 1A
SCARBOROUGH, ONT.
☎: (416) 292-9319

2580 Sheppard Ave. #9
Newin Centre Mall
Mississauga, Ont.
☎: (905) 306-0494

# ஆரோக்கிய வாழ்வு (56)



\- *N.* செல்வசோதி

**ஆரோக்கிய வாழ்வுக்கு சில யோசனைகள்**

*சென்ற இதழின் தொடர்ச்சி*

**தூக்கம்**

தூக்கம் ஒரு சிறந்த மருந்து. தூக்கம், பொழுது முழுதும் செய்த உழைப்பிலிருந்து ஓய்வு அளிப்பதுடன் உடலின் சக்திகளையும் அதிகரிக்கிறது. தூக்கத்தில் உடலின் சக்தி மிக மிக குறைவாகவே செலவாகின்றது. தூங்கி எழுந்தவுடன் புத்துணர்ச்சியைக் காணமுடிகிறது. ஒருவனுடைய வாழ்க்கை முறைக்கேற்ப அவன் பகலில் இழந்த வலிமையை தூக்கத்தில் திரும்பவும் பெறக்கூடியதாயுள்ளது.

தூக்கமும் மருந்துதான். அதனாலேதான் வைத்தியர்களும் நோயாளிகளை நன்றாகத் தூங்கச் சொல்கிறார்கள். தூங்கும் நோயாளியை அனாவசியமாக எழுப்புவதும் அனுமதிக்கப்படுவதில்லை.

பிறந்த குழந்தை தினமும் இருபது மணி நேரம் தூங்குகிறது. தூக்கம் அதன் உடல் வளர்ச்சிக்கு உதவியாக உள்ளது. ஆரோக்கியத்தை விரும்புவோர் தினமும் எட்டு மணி நேரம் தூங்கவேண்டும். வயதானவர்கள் இரவில் நேரத்துடன் படுத்து அதிகாலையில் எழவேண்டும். தூங்கும் போது முழுஓய்வு கிடைக்கிறது. கவலைகள் தொல்லைகளை மறக்க முடிகிறது. மனம் அமைதி பெறுகிறது. இழந்த சக்தியை மீண்டும் பெற முடிகிறது.

**காற்று**

மனிதன் உணவின்றி பல நாட்கள் உயிர் வாழலாம். தண்ணீரின்றி சில நாட்கள் உயிர் வாழலாம். காற்றின்றி ஒரு சில வினாடிகள் கூட உயிர் வாழமுடியாது. காற்றிலுள்ள உயிர்ச் சக்தி உயிர் மூச்சுக்கு உதவி செய்கிறது நுரையீரலை சுத்தமாக்குகிறது. இரத்தத்தில் கலந்துள்ள கரியமில வாயுவை அகற்றுகிறது. தூய்மையான காற்று நம் உடலை வந்தடையும் போது புத்துணர்ச்சி உண்டாகிறது. நாளில் பெரும்பகுதி நேரம் காற்று உடலில் நன்றாகப் படுவதற்கு வசதி செய்ய வேண்டும். நேரடியாகக் காற்று நம் உடலைத் தீண்டவேண்டும். எந்த நேரமும் ஜன்னல்களை மூடி வைக்காது அடிக்கடி திறந்து மூடவேண்டும். காற்று நமது மயிர் கால்களினூடே பாய்ந்து சென்று உடலின் ஆரோக்கியத்திற்கு உதவுகிறது. காற்று உடலை நன்றாகத் தீண்டுவதற்கு வசதியாக இலேசான ஆடைகளை அணிவது நன்மை பயக்கும்.

சுத்தமான காற்றை மூக்கின் வழியே ஆழமாக உள்ளிழுத்து மெதுவாக வெளிவிடுவதால் இரத்தம் நன்றாக சுத்திகரிக்கப்படுகிறது. உணவு உண்பதற்கு முன்பும், படுத்து உறங்குவதற்கு முன்பும் காற்றை ஆழமாக உள்ளிழுத்து மெல்ல வெளியே விடும் பழக்கத்தைத் தினமும் கைக்கொண்டு வருதல் வேண்டும்.

**சூரிய ஒளி**

தினமும் ஒரு குறிப்பிட்ட அளவு நேரமாவது சூரிய ஒளி நம் உடலில் படும்படி அன்றாட வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும். அது அதிகாலையில் சில நிமிடமும், அத்துடன் நண்பகலிலும் மாலையிலும் சில நிமிடங்களை ஒதுக்க வேண்டும். சூரிய ஒளி எவ்வளவு தேவை என்பதை நம் மூன்னோர்கள் பின்வருமாறு வலியுறுத்தியுள்ளனர். காலை வெய்யில் தூக்க மயக்கத்தை போக்கி சுறுசுறுப்பை உண்டாக்குகிறது. நண்பகல் வெய்யில் உடலுக்கு வேண்டிய சகல சக்தியை அளிக்கிறது. மாலை வெய்யில் ஆரோக்கிய அபிவிருத்திக்கு உதவுகிறது. சூரிய ஒளி உடலில் நேரிடையாகப் படக்கூடியவாறு மெல்லிய ஆடைகளை சில வேளைகளிலாவது அணிவது நன்மை பயக்கும்.


**யோகாசன வகுப்பு**

யோகாசனப் பயிற்சிகள் மூலம் உங்கள் உடல் நலத்தைப் பேணுங்கள். யோகாசனப் பயிற்சி வகுப்புக்கு தொடர்புகொள்ள

இடம்: Woburn Collegiat e (Markham /Ellesmere)

நேரம்: 7:30 am - 8:30am தொடர்புகளிற்கு: - சத்தி: 291-5853

**YARLCAN STEAM CLEANING**





உங்கள் சகலவிதமான **Cleaning** தேவைகளுக்கும் அழையுங்கள் மோகன்

Tel: 724-9085

Pager : 600 -0335

Cell: 721-9709

**Neelam SILK**

**நீலம் சில்க்**

*2000ஆம் ஆண்டின் புதிய புடவைத் தெரிவுகளை நம்மவர்களுக்கு அறியத்தருகிறார்கள் 'நீலம் சில்க்'*

**உயர்ரகப் பட்டுப் புடவைகளிற்கு நீலம் சில்க்**

- முகூர்த்தப்பட்டுப் புடவைகள்
- பாரம்பரிய பட்டுப் புடவைகள்
- Thread Work பட்டுப்புடவைகள்
- ரிசு சேலைகள்
- காஞ்சி 2000 ரிசு சேலைகள்
- Emboss Tissue சேலைகள்,
- Cut Work சேலைகள்
- அபூர்வா 2000 Cut Work



**புதிய வெளியீடுகள்**

மைசூர் சில்க் சேலைகள், சோனா மீனா (Sona Meena) புதிய டிசைன்கள். இவை மட்டுமல்ல இன்னும் பலவித தெரிவுகள்

"தமிழர் மத்தியில் ஓர் தரமான பட்டுப்புடவை மாளிகை"

**'நீலம் சில்க்'**

**1453 GERRARD STREET EAST (Indian Bazzar)**

CALL: (416) 778- 7455 FAX: (416) 778-8484

**நான் ஒரு வழக்கறிஞர் இல்லை!**




எஸ்.கே.தீசன் S.K.Theesan

**416-631-6322**

CRIMINAL கிரிமினல் வழக்குகள்



DOG BITES SLIP & FALL

## ஒரு சாதாரண மனிதரின் சிந்தனையில்.....



### நம்பிக்கை

மனிதனின் வாழ்க்கை முழுவதுமே நம்பிக்கையில் தான் தங்கி உள்ளது. நாளை நல்லது நடக்கும் என்ற நம்பிக்கையில் தான் நாளையை நாம் மகிழ்ச்சியுடன் எதிர் பார்க்கின்றோம். ஆண்டவன் நம்மை காப்பான் என்ற நம்பிக்கையில் அவன் மீது பக்தி கொள்கின்றோம். மனைவி அல்லது கணவன் நல்லவர்களாக இருபார்கள் என்ற நம்பிக்கையில் தான் காதலும் அன்பும் வைத்து வாழ்க்கையைத் தொடர்கின்றோம். பிள்ளைகள் நல்லவர்களாக வருவார்கள் என்ற நம்பிக்கையில் தான் எவ்வளவு கஸ்டம் இருப்பினும் அவர்கள் மீது அன்பு செலுத்தி வேண்டியதை இயன்ற வரையில் செய்து கொடுக்கின்றோம். அந்த நம்பிக்கை தகர்ந்து விடும் போது வாழ்க்கையே தகர்ந்து விடுகின்றது.

விரும்பிய கருமம் ஒன்றை அடைய அதில் கண்ணாக இருந்து கஸ்டப்பட்டு அதில் வெற்றி பெற உழைப்பதோடு வெற்றிக்காக இறைவனையும் வேண்டுகின்றோம். மதங்களில் அல்லது இறைவனில் அதிக நம்பிக்கை வைத்து இருப்பவர்கள் தமது வெ[illegible]ிக்கு அல்லாவோ , யேசுவோ, பிள்ளையாரோ தான் காரணம் என்று நம[illegible]கிறார்கள். அதே வேளை மதங்களில் இறைவனில் அதிக நம்பிக்கை இல்லாதவர்கள் அடையும் வெற்றிக்கு யார் காரணம்? எந்த மதத்தினராக இருந்த போதும் இறைவனை நேரே கண்டவர்கள் யாரும் இல்லை. தனது வாழ்க்கையின் வெற்றிக்கு இந்த மதத்தில் உள்ள இந்த இறைவன் தான் என்று அடித்து சொல்லி நிருபிக்கவும் யாராலும் முடியாது. நியாயமான ஒரு கருமத்தில் நம்பிக்கை வைத்து நியாயமான முறையில் உழைப்பில் நம்பிக்கை வைத்து உழைக்கும் போது மனிதனின் உழைப்புக்கு ஏற்ப வெற்றி அவனை அடைகின்றது. இறைவனை வேண்டுபவர்கள் தமது கருமத்தில் கண்ணாக இருப்பதற்கு அவனை தூண்டு கோலாக பாவிக்கின்றார்கள். வெற்றி கிட்டும் போது இறைவனுக்கு நன்றி சொல்வதிலும் நியாயம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் ஒன்று மட்டும் உறுதியாக நான் செய்கிறது. ஆனால் ஒன்று மட்டும் உறுதியாக நம்புவது. ஒவ்வொருவரின் வாழ்க்கையும் அவர்களுக்கு என்று நியமிக்கப்பட்ட நியதியின் படிதான் நடக்கின்றது என்பதைத் தான் உதாரணமாக நடனம் என்று வரும் போது எவ்வளவு கஸ்டப்பட்டு முயன்றாலும் வான் கோழியின் நடனம் மயிலுடன் ஒப்பிட முடியாத அளவுக்கு இருப்பதன் காரணம் நியதியே ஆகும். இந்த உதாரணம் தடைப்பட்ட ஒவ்வொருக்கும் பொருந்தும்.

பொதுவாக மதம் மாறுபவர்கள் சொல்லும் காரணம் எல்லாம் அந்த சமயத்தில் நம்பிக்கை வைத்து கும்பிட்டோம் ஒன்றும் நடக்கவில்லை. இந்த சமயத்திற்கு மாறி நல்லது நடந்தது என்பதேயாகும். அது காகம் இருக்க பனம் பழம் விழுந்த கதை போல் தான் என்பதை அவர்கள் ஒத்துக் கொள்ள மாட்டார்கள் என்றபோதும் போது உண்மை அதுதான். மதங்களில் ஒரு பிழையும் இல்லை. அதை வழிபடும் மனங்களில் தான் பிழை என்பதை என்று மக்கள் உணர்கின்றார்களோ அன்று தான் உலகில் நல்லது நடக்கும்.

மதம் மாறுவதும் விடுவதும் ஒவ்வொருவரது தனிச் சுதந்திரம் அதை யாரும் தடை செய்ய முடியாது. முற்றிலும் சுய நலமாக நீங்கள் எடுக்கும் முடிவால் வரும் வி[illegible]ாவுகளை ஏற்றுக் கொள்ள நீங்கள் தயாராக இருந்து கொள்வது நல்லது. [illegible]றார், உற்றார், உறவினர்கள் வழியில் இருந்து நீங்கள் விலகி வேறு வழியில் செல்லும் போது அவர்களது நம்பிக்கையில் இருந்து விலகி செல்லும் நீங்கள் எடுத்த முடிவு தங்கள் நம்பிக்கை ஒரு மூடத்தனமான நம்பிக்கை என்று நீங்கள் சொல்லாமல் சொல்லுவதாக கருதிக் கொள்கின்றார்கள். மனம் துன்பம் அடைகின்றார்கள். நீங்கள் எவ்வளவு தான் எடுத்துக் சொல்லியும் அவர்கள் நம்பத் தயாராக இல்லை. அது அவர்கள் சுதந்திரம். அதை நீங்கள் மாற்ற முடியாது. உறவுகள் முறியும் நிலைகள் ஏற்படலாம். அதற்கு நீங்கள் தான் காரண கர்த்தாக்கள் ஆகின்றீர்கள். இதற்கு நீங்கள் தயாராக இருந்தால் உங்கள் நம்பிக்கையில் முன்னேறி செல்லுங்கள்.

மற்றைய மதங்களையும், உறவினர்களையும் வீணாக சாடாதீர்கள்.

*சிந்தனை தொடரும்....* *பரம் G. ஒரு சாதாரண மனிதன்*

### ஆசனப்பட்டி அணியாததால் விபத்தில் மரணமானதை கண்டிக்கும் பொலீஸ் உத்தியோகத்தர்

பொதுவாக வாகனங்களில் செல்வோரில பின் ஆசனங்களில் உட்கார்ந்து இருந்து பிரயாணம் செய்வோர் வழமையாக ஆசனப்பட்டி அணிவதில்லை. வீதி ஒழுங்கு சட்ட விதிகளிலும் அதனை உறுதியாக வலியுறுதப்படவில்லை.

இதன் காரணமாக வீதி விபத்துகளின் போது ஆசனப்பட்டி அணிந்து சாரதியும், முன்ஆசனத்தில் இருந்தவரும் தப்பித்துக் கொள்ள, ஆசனப்பட்டி அணியாமல் பின் வாகனங்களில் இருப்போர் மரணமாவது பல த[illegible]வைகளிலும் வழமையாக நடப்பதாகும்.

கனடாவில் உள்ள ஈழத் தமிழர்கள் இவ்வாறு பலதடவைகளிலும் மரணத்தினை தழுவியுள்ளனர்.
கடந்த கிழமை 401 நெடுஞ்சாலையில் பத்தொன்பது வயது பெண் ஒருத்தி இவ்வாறு ஆசனப்பட்டி அணியாது மரணமாகிய சம்பவத்தில் ஒன்ராரியோ மாகாண உயர் பொலீஸ் அதிகாரி திரு. கெவின் ஆம்ஸ்ரோங் இதனை வன்மையாக கண்டித்துள்ளார்.

இக்குறிப்பிட்ட விபத்தில் சாரதியும், முன் ஆசனத்தில் இருந்து பிரயாணம் செய்தவரும் ஆசனப்பட்டி அணிந்து கொண்ட காரணத்தினால் தப்பிக் கொண்டனர். ஒன்ராரியோ மாகாணச் சாரதி பயிற்சி நெறி திட்டங்களில் வகுப்பறை பாட போதனையின் போது இத்தகைய ஆசனப்பட்டி அணிய தவறுதலால் ஏற்படும் விபத்துக்கள் பற்றி ஒரு தனி பாடமாகவே போதிக்கப்படுவது இங்கு குறிப்பிட வேண்டிய விடயமாகும்.

11 வருடங்களாக தமிழர் மத்தியில்

# யோகாஸ்

☎: (416) 267-0408

## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 106

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 2 | ■ | 3 | ■ |
| | ■ | ■ | ■ | | ■ | | 4 |
| 5 | 6 | | | | | ■ | |
| ■ | | ■ | ■ | | ■ | 7 | |
| 8 | | | ■ | | ■ | ■ | |
| 9 | | | | ■ | 10 | | |
| | ■ | | ■ | ■ | ■ | ■ | |
| | ■ | 11 | | | | | |

**இடமிருந்து - வலம்**
1. ஆறுசுவைகளில் ஒன்று
4. வழி (வல-இட)
5. 90 நிமிடங்களைக் குறிக்கும் தமிழ் காலஅளவு
7. கல்
8. இச்செடியில் இருந்து போதை மருந்து தயாரிக்கப்படும் (வல - இட)
9. ஆண் பூனை
10. சிறிய தாய்
11. மரங்களின் இனப்பெருக்கத்திற்கு உதவும் பூவின் பகுதி


**மேலிருந்து கீழ்**
2. நூல்
3. தண்டாயுதம்
4. கல்வித்திறம்
5. நவமணிகளில் ஒன்று (கீழ் - மேல்)
6. அழை
8. தமிழ் பாக்களில் ஒருவகை
11. போர் வீரன் (கீழ் - மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் **APRIL** 27, 2000க்கு முன்னர் விளம்பரம் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ப | ப் | ப | ட | ம் | ■ | ழை | இ |
| ர் | ■ | ந் | ■ | ர | ■ | ■ | று |
| வ | ■ | த | ■ | கா | ர | ண | ம் |
| த | ண | ல் | ■ | டி | ■ | ■ | பூ |
| ம் | ■ | ■ | ம் | க | மு | றை | து |
| ■ | சி | பா | ■ | ■ | க | ■ | ■ |
| சு | ■ | து | லா | ■ | ப் | ■ | றி |
| தூ | ரி | கை | ■ | ■ | பு | ப் | உ |

**#105இல் வெற்றி பெற்றோர்**
1)Kanagaratnam, Scarborough, Ont.
2.V. Teva, Mississauga Ont.

*இலங்கை, இந்திய, கனேடிய உணவுப் பொருட்கள் உடன் ஆட்டிறைச்சி, கோழி, மாடு, மீன், கணவாய் மற்றும் சகல விதமான உணவுப் பொருட்களுக்கும் நாடுங்கள்*

பூட்டு? சாவி?


**KEERTH LOGSMITH**

வீடு-வியாபாரம்-தொழிலகம்

வீட்டு திறப்புகள் தொலைந்து விட்டதா? மாற்ற வேண்டுமா? மற்றும் உங்களது சகலவித திறப்பு சம்பந்தமான பிரச்சினைகளிற்கு தீர்வு காண நினைவில் வைத்திருக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்

(416) 439-3709

Pager: 375-7330



## ரதீக்கா நகை மாளிகை

- உங்கள் விருப்பமோ குறைந்த விலையில் வாங்குவது, எங்கள் விருப்பமோ இனிமேல் யாரும் குறைக்க முடியாத விலையில் தருவது
- உங்கள் விருப்பமோ குறித்த தவணையில் பெறுவது, எங்கள் விருப்பமோ ஒருநாள் ஏனும் முந்தியே தருவது
- உங்கள் விருப்பமோ இந்த நகைகளை எங்கே வாங்கியது என நண்பர்கள் கேட்பது, எங்கள் விருப்பமோ ரதீக்காவில் வாங்கியது என நீங்கள் பெருமையுடன் சொல்வது
- தாலிக்கும் நகைகளுக்கும் ஓடர் கொடுத்தாச்சு, காரை எடு இனிக் கூறை அலுவலைப்பார்ப்பம் என்று அலைய வேண்டாம். ரதீக்கா நகைமாளிகையும் மஞ்சுளா பஷனும் ஒரே இடத்தில்.
- இப்பொழுது புதிதாக அமைக்கப்பட்ட மிகப்பிரமாண்டமான காட்சியறையில் ரதீக்கா நகைமாளிகை உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது.

ரதீக்காவின் புதிய விலாசம்

**RATHICKA JEWELLERY**

5635 Finch Ave. East, Unit 3, (Finch and Tapscott)
Scarborough, Ontario, M1B 5K9, Canada

**Tel: (416) 299-1343**

# விளையாட்டுத் தகவல்கள் (52)

-எஸ். கணேஷ்


## ஒரு சரித்திரம் முடிவடைகின்றது???



இதுவரை உலகில் உதைபந்தாட்டத்தில் பல உலக புகழ் பெற்ற வீரர்களை உலகம் கண்டு மகிழ்ந்துள்ளது. இந்த வரிசையில் Pele (பிரேசில்), Platini (France), Franz Becken Bauer (ஜேர்மனி), Maradona (ஆர்ஜன்ரீனா) ஆகியோர் உதைபந்தாட்ட சரித்திரத்தில் பல வருடங்கள் பளிச்சிட்டவர்கள் என்பது தெட்டத் தெளிந்த உண்மையாகும். இந்த வரிசையில் உலகத்திலேயே இதுவரை அதிகூடிய (144) International ஆட்டங்களில் கலந்து கொண்டவரான Lother Matthaus சாதனைகளின் சிகரம் என்றால் மிகையாகாது. இன்றைய உதைபந்தாட்ட உலகில் பல முன்னணி வீரர்கள் தோன்றுகின்றார்கள் மில்லியன் கணக்கில் சம்பாதிக்கின்றார்கள் ஆனால் இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்குள் இருந்த இடமே தெரியாமல் காண-ாமல் போய்விடுகின்றார்கள். ஆனால் Lother Matthaus 144 ஆட்டங்களை கடந்து விட்ட போதும் தற்போதும் ஜேர்மன் அணிக்கு விளையாடிக் கொண்டிருக்கின்றார். இவ்வருடம் நடைபெற இருக்கும் 'Euro 2000' இன் போட்டிகளுடன் இவரின் உதைபந்தாட்ட சரித்திரம் முடிவடையும் என பலரும் எதிர்பார்க்கிறார்கள். தற்போது 39 வயதுடைய Matthaus இன் சாதனைகளை பார்க்கும் போது இதுவரை உலகத்தில் எவருமே இப்படியாக தனி ஒரு வீரர் ஆக உதைபந்தாட்டத்தில் சாதனைகள் படைக்கவில்லை என்பதே உண்மை. தற்போதும் எம் கண்முன்னே விளையாடிக் கொண்டிருக்கும் Matthaus க்கு இறைவன் கொடுத்த கொடையே என்றால் மிகையாகாது.



இதுவரை 5 World Cup போட்டிகளில் கலத்து கொண்ட ஒரே ஒரு வீரர் உலகத்தில் Matthaus யே ஆகும். 21 திகதி March மாதம் 1961 ஆம் ஆண்டு ஜேர்மனியில் பிறந்த இவர் 18 வயதிலேயே உலகப் புகழ் பெற்ற வீரர் ஆனார். Libero என்னும் Position இல் விளையாடும் இவர் முதன் முதல் France Becken Bauer இனால் உலகிலேயே அறிமுகம் செய்யப்பட்ட Position இது (அதாவது இரண்டு Defender களுக்கும் Goal Keeper க்கும் இடைப்பட்ட பகுதியில் விளையாடும் Position இது ஆனால் தேவை ஏற்படின் மைதானத்துள் முழுப்பகுதியிலும் விளையாட தகுதி பெற்ற Position), இந்த Libero Position இல் விளையாடி பல கோல்களை போட்டுள்ளார். உலகிலேயே Penalty Kicks அடித்து கோல்கள் போடுவதில் இவரை மிஞ்சியவர்கள் எவருமேயில்லை.



முதன்முதலில் World Cup போட்டியில் Spain (1982), Mexico (1986), Italy (1990), USA (1994), France(1998) என தொடர்ந்த 5 World Cup களில் பங்கு பற்றிய உலகில் ஒரே ஒரு வீரர் ஆவார். இவரின் சாதனைகளை இங்கு பார்ப்போம்.

முதலில் இவர் விளையாடிய கழகங்களை இங்கு பார்ப்போம்.

| | |
|---|---|
| 1970 - 1978 - | Fc Herzogenrauch (Germany) |
| 1979 - 1984 - | Borssia Monchengladbach (Germany) |
| 1984 - 1988 - | Bayern Munich (Germany) |
| 1988 - 1992 - | Inter Milan (Italy) |
| 1993 - 1999 - | Bayern Munich (Germany) |
| 2000 - To Date | Metrostars Newyersey (USA) |

இவர் விளையாடிய கழக சாதனைகளை (Team Honours) பார்ப்போம்

German Champion:- 1985, 1986, 1987, 1994, 1997, 1999
Italian Champion - 1989
UEFA Cup Champion - 1991 (Intermilan), 1996 (Bayern Munich)

இவர் விளையாடிய (நாட்டிற்காக (Germany சார்பாக National Houours )


European Champion - 1980, 1996
World Champion - 1990
Runners-Up - 1982, 1986

Matthaus இன் தனிப்பட்ட சாதனைகள் (Personal Honours)

European Player Of the year - 1990
World Player of the year - 1991
German Player of the year -1999

மேற்க்குறிப்பிட்ட சாதனைகளை எல்லாம் பார்க்கும் போது உதைபந்தாட்டத்தி இதுவரை சாதனைகள் நிகழ்த்துவதற்கே இறைவனால் உலகி படைக்கப்பட்டுள்ளார் என்று எண்ணத் தோன்றுகின்றது. இதுவ உதைபந்தாட்ட உலகில் இப்படியாக ஒரு வீரர் தானும் இதுவரை சாதனைகள நிகழ்த்தவில்லை. Matthaus, 'European 2000' போட்டிகளில் இவ்வருட ஜேர்மனி சார்பாக களம் இறங்க உள்ளார். World Cup போன்று Europea Cup இம் 4 வருடங்களுக்கு ஒரு முறையே நடைபெறும். இவ்வருடம் Hollan இலும் Belgium இலும் சேர்ந்து நடைபெற இருக்கும் போட்டிகளில் இன்னு எத்தனை சாதனைகளை Matthaus ஏற்படுத்தப் போகின்றார் என்பன பொறுத்திருந்து பார்ப்போம்.


KD FINANCIAL SERVICES
Vamadevan Jeyamohan (Jey)
(President)
Royal Bank Approved Third Party Referral Agent
VISA CARDS UPTO $5000
புதியவர்கள் (Fresh Credit) அல்லது நல்ல நிலையில்
கிறடிற்றை (Good Credit History) வைத்திருப்பவர்களிற்கும்
வேலை செய்யும் கடிதம் (Employment Letter)
உடையவர்களிற்கும் விசா காட் எடுத்துத் தரப்படும்
Tel: (416) 431-9315 Fax: (416) 431-2119
Cell: (416) 575-8427 EmailL: Jeys@ica.net
தொடர்புகளுக்கு: weekdays - 5:30pm - 10:00 pm.
Nada Jeyadevan Financial Rep.
Tel: -(416) 398-4760 10:00Am - 8:00pm

பூச்சிகளை அழிக்கவே முடியாதா?
CITY PEST CONTROL
* எலிகள் * கரப்பான் பூச்சிகள்
* மூட்டைப்பூச்சிகள் * எறும்புகள்


போன்றவற்றை முற்றாக அழித்து நிவாரணம்
பெற இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.
* 100% முற்றாக அழிக்க முடியும் என்று எழுத்து மூலம் தரப்படும்
*ஒருதடவை அணுகுங்கள் உண்மை புரியும்*
* WE ARE QUALIFIED, PROFESSIONAL, INSURED AND BONDED.
* NO NEED TO LEAVE TO HOME OR REMOVE DISHES DURING TREATMENT.

(416) 410-2786
7 நாட்களும் அழைக்கலாம

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

-தொகுப்பு - சண்

**1976**


1. அன்னக்கிளி 2. அக்கா
3. அதிருஷ்டம் அழைக்கிறது
4. ஆசை 60 நாள் 5. இது இவர்களின் கதை
6. இன்ஸ்பெக்டர் மனைவி 7. இதய மலர்
8. உழைக்கும் கரங்கள் * 9. உத்தமன் *
10. உறவாடும் நெஞ்சம்
11. உண்மையே உன்விலை என்ன?
12. உங்களில் ஒருத்தி 13. உணர்ச்சிகள்
14. உனக்காக நான்* 15. ஊருக்கு உழைப்பவன்
. ஒரு ஊதாப்பூ கண்சிமிட்டுகிறது
17. ஒரு கொடியில் இரு மலர்கள்
18. ஒரே தந்தை 19. ஓ மஞ்சு*
20. கணவன் மனைவி
21. காலங்களில் அவள் வசந்தம்
22. கிரஹப்பிரவேசம்* 23. குமார விஜயம்
24. குலகொரவம் 25. சத்யம்
26. சந்ததி 27. சித்திரா பௌர்ணமி*
28. தசாவதாரம்* 29. தாயில்லாக் குழந்தை*
30. துணிவே துணை* 31. நல்ல பெண்மணி
32. நினைப்பது நிறைவேறும் 33. நீ ஒரு மகராணி
34. நீ இன்றி நானில்லை 35. நீதிக்கு தலைவணங்கு
36. பயணம் 37. பணக்காரப் பெண்
38. பத்ரகாளி
39. பாலூட்டி வளர்த்த கிளி 40. பேரும் புகழும்
41. மன்மத லீலை* 42. மகராசி வாழ்க
43. மதன மாளிகை 44. மனமார வாழ்த்துங்கள்
45. மிட்டாய் மம்மி 46. முத்தான முத்தல்லவோ
47. மூன்று முடிச்சு 48. மேயர் மீனாட்சி*
49. மோகம் முப்பது வருஷம் 50. ரோஜாவின் ராஜா*
51. லலிதா* 52. வரப்பிரசாதம்
53. வாழ்வு என் பக்கம் 54. வாயில்லா பூச்சி
55. வாங்க சம்மந்தி வாங்க 56. வீடு வரை உறவு
7. ஜானகி சபதம்

தமிழ் சினிமாவின் மெல்லிசைப பூங்காவிற்குள் 'மண்வாசனை' புகுந்த நேரம் இது. ஒரு கிராமியப் புல்லாங்குழல் திரை இசைக்குப் பூமாலை அணிவித்துப் பூபாளம பாடியது இவ்வாண்டில் தான். தாரை-தப்பட்டை-உடுக்கு-மேளம்-கும்மி-தெம்மாங்கு-காவடிச் சிந்து எனப் பாடறியேன் படிப்பறியேன என வாய் மூடி இருந்தவர்களையெல்லாம பாட்டிசைக்க வைத்த ஒரு கிராமத்து மனிதனின் பிரபல்யமான தமிழ சினிமாவில் புதிய அத்தியாயம கண்டது. ஆம்... இயக்குநர்-பஞ்சு அருணாசலம் அவர்களால அறிமுகப்படுத்தப்பட்ட அந்த இளைஞனுக்குப் பெயர் அப்போது "இளையராஜா.' இப்போது அவர் 'மாஸ்ரோ' இசைஞானி இளையராஜா. அன்னக்கிளி திரைப்படத்தின் வாயிலாக தமிழ சினிமா இசைக்குப் புதிய பரிமாணம் தந்த இளையராஜாவின வருகையுடன் இவ்வாண்டிக்கான திரைப்படங்களாக சுமார் 57 படங்கள் வெளியானது.



உனக்காக நான், கிரகப்பிரவேசம், சத்யம், சித்ராபௌணமி, ரோஜாவின் ராஜா, உத்தமன் என ஆறு படங்கள் சிவாஜி படங்களாக வெளியாயின. எம்.ஜி.ஆர் படங்களிள் 'நீதிக்குத தலைவணங்கு' குறிப்பிட்டுச் சொல்ல கூடயதாக இருந்தது.

கமல் நடித்து வெளிவந்த 'ஒரு ஊதாப்பூ கண் சிமிட்டுகிறது' (புஸ்பா தங்கத்துரையின நாவல்) கே. பாலசந்தர் இயக்கத்தில் வெளிவந்த 'மன்மதலீலை, சிவகுமார் படமான 'பத்ரகாளி ' ஆகியன பேசப்பட்ட படங்களாக வெற்றிபெற்றன. மற்றும் பல்வேறு கதா-நாயக, நாயகிகளின் படங்களான அனைத்தும் ஜனரஞ்சகம் மிகுந்ததாகவும், சமூக குடும்ப உறவுகளைப் பிரதிபலிப்பாவையாகவும் வெளி வந்தன.



### 1976ம் ஆண்டில் சென்னை சினிமா இரசிகர் சங்கத்தின் விருதுகள் விபரம்

| | | |
|---|---|---|
| சிறந்த படம்: | அன்னக்கிளி - S.P.T. பிலிம்ஸ் | |
| விசேடபரிசு: | பத்ரகாளி - சினிபாரத் | |
| நடிகர். | R. முத்துராமன் | உண்மையே உன் விலை என்ன |
| இயக்குநர்: | SP. முத்துராமன் | மோகம் 30 வருஷம் |
| நடிகை: | சுஜாதா | லலிதா |
| துணை நடிகர்: | விஜயகுமார்- | ஒரு ஊதாப்பூ கண் சிமிட்டுகிறது |
| துணை நடிகை: | ஸ்ரீபிரியா | மோகம் 30 வருஷம் |
| பின்னணி: | ஜேசுதாஸ் | S. ஜானகி |
| இசை: | இளையராஜா | அன்னக்கிளி |
| நகைச்சுவை நடிகர்: | தேங்காய் சீனிவாசன் | பத்ரகாளி |
| நகைச்சுவை நடிகை: | மனோரமா | மோகம் 30 வருஷம் |


**TAMIL INSURANCE CLAIMS CONSULTANT** தமிழில் இலவச ஆலோசனை

**வாகன விபத்து அல்லது வீடு விபத்து ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?**

*தகுந்த ஆலோசனை *சட்ட உரிமை *உரிய நஷ்ட ஈடு
*விபத்துக்குள்ளாலியவர் சம்பள இழப்பீடு
*மற்றும் நுணுக்கமான ஆலோசனைகளும் அறிவுரைகளும் தமிழிலும்
ஆங்கிலத்திலும் சிறந்த முறையில் பெற்றுக்கொள்ள 12 வருடகால அனுபவமுள்ளவர்

**ரவி நடராஜா**

TEl:(416) 245-6555 Fax: (416) 245 7766
2095 Weston Rd. #201 (South of HWY 401) Toronto Ont. M9N 1X7




## நான் வாழப்போகிறேன்

சுவடு 52

-வீணை மைந்தன்

ஹிந்துவில் திறனாய்வாளர் ரி.ஜி. வைத்தியநாதன் எழுதிய 'Sivagi Ganeshan' - 'Chevalier Extraordinary எனும் தலைப்பிலான ஆங்கிலக் கட்டுரையின் தமிழாக்கம் சென்ற வாரத் தொடர்ச்சி....)

"....சிவாஜியின் அண்மையில் வந்த படம் 'தேவர் மகன்' இதில் அவர் நடிப்பு தலை சிறந்தது. அவர் அங்கே காணப்படுவதே பிரமிப்பூட்டுவதாகும். அவரது சுயமான இயற்கை நடிப்பினைப் பாதிப்பவையான சிருங்காரக் காட்சிகள் (அவரது மிக அற்புதமான நடிப்பினை 'முதல் மரியாதை' (1985ல் பதிவு செய்தது), கண் புருவங்களைத் தேவைக் கதிகமாக உயர்த்துதல் - அபரிதமான கையசைவுகள் தேவையற்ற வறண்ட சிரிப்பு ஆகிய யாவும் அடக்கி வாசிக்கப்பட்டு உரம் தீட்டப்பட்டமையால் ஒவ்வொரு காட்சியும் உணர்ச்சி பூர்வமானதாகவும், நிறைவானதாகவும் அமைந்தது.

சிவாஜிக்கும் கமலுக்கும் இடையே ஏற்படும் நேரடி போராட்டம் பற்றி இங்கு நான் குறிப்பிட்டே ஆக வேண்டும். (The Water Front') எனும் திரைக் காவியத்தில் 'Marlan Brando' விற்கும் 'Steiger' விற்கும் இடையே நடைபெற்றதை நினைவூட்டியது. இயக்குநர் பரதனின் காட்சி நிகழ்வுச் சூழல்களும் மேடையேற்றமும் தத்ரூபமாய் அமைந்திருந்தன. சோனாவாரியாக மழை பின்புலத்திலே பொழிந்து கொண்டிருக்கத் தந்தைக்கும் மகனுக்குமிடையே நேரடியான போராட்டம் சிவாஜியினுடைய நடிப்புப்பாணி தந்தைக்குரிய ஆதிக்கமும் கவர்ச்சியும் பிரதிபலிக்கும் நடிப்பில் அவர் எல்லா நிலைகளையும் தாண்டி புதிய எல்லைகளையே வகுத்துள்ளார்' கமலும் அவருக்கு ஈடாகச் செய்துள்ளார். இறந்தகாலம் நிகழ்காலத்தை எதிர்கொள்கிறது. வித்தியாசமான இரண்டு நடிப்புப் பாணிகள் கைகோர்த்துக் கொள்கின்றன. விளைவோ கிளர்ச்சியூட்டுகிறது. மாயத்தேவரால் (நாசர் மிக நன்றாகச் செய்துள்ளார்) அவமானப்பட்ட சிவாஜி இறக்கின்ற காட்சி உண்மையிலே அற்புதமான காட்சி. பேரப்பிள்ளைகள் உடம்பை நீவிவிட 'போற்றிப் பாடடி பெண்ணே' எனும் பாட்டு வரிகள் துன்பச் சுமையுடன் ஒலிக்க சிவாஜி இறக்கின்ற காட்சி இன்னும் பலமுறை பார்க்கவும் கேட்கவும் கூடிய நேர்த்தி மிக்கது. இப்பாடல் தொடர்ந்து வரவுள்ள காட்சியான சிவாஜியைத் தகனம் செய்யும் காட்சிக்குரிய ஒலி ஆதார சுருதியாகிறது. என்றுமே நினைவில் ரீங்காரம் செய்யும் பாடலொலியாகிறது. வருங்கால சந்ததியினர் நிச்சயமாகச் சிவாஜிக்கு முன் சிவாஜிக்குப் பின் என்றே வரையறுத்துப் பேசுவார்கள் என்பது உண்மை.

இந்தியத் திரை உலகின் மூன்று குமார்கள் ஆன திலிப்குமார் - அசோக்குமார்-உத்தம் குமார்-ஆகியோர் தற்காலிகமாக சிவாஜியின் பிரதேச ரீதியான புகழைச் சிறிது பறித்து விட்டனர் என்பது உண்மையே. ஆனால் இன்றைய சிவாஜி ஈடு இணையற்றவராக உலக தரத்திலே Paulmuni யுடனோ Chaplin உடனே Greata Garbo வுடனே ஒப்பிடக் கூடிய முதன்மை நிலையில் உள்ளவராகப் பரிணமித்துள்ளார். சிவாஜி அன்றும் இன்றும் தனித் தகமையுடைய முதன்மை நிலை நடிகர். சிவாஜி கலைத் தேவதைகள் ஒன்பதில் ஏழாவது காவியத் தேவதையான வீரத்திருமகன்.

**சிவாஜியே! எமக்குப் பெருமை சேர்த்தமைக்காக உமக்கு எமது நன்றிகள்".**

கடந்த மூன்று இதழ்களிலும் பிரபல கலை விமர்சகர் திறனாய்வாளராகிய (ஹிண்டுவில் எழுதுபவர்) ரி.ஜி. வைத்தியநாதன் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய சிவாஜி பற்றிய பார்வைகளை ஒப்பு நோக்கை வார்த்தை பிசகாது தமிழ் மொழியாக்கம் செய்திருந்தேன். ஆரம்பத்தில் நான் குறிப்பிட்டது போன்று எப்படி திரு. வைத்தியநாதன் அவர்களுடைய சில பார்வைகளுடன் ஒத்துப்போக முடியவில்லையோ அப்படியே பல இரசிகர்களுக்கும் ஒத்தப் போக முடியவில்லையென்பது அவ்வப்போது வரும் தொலைபேசி முறைப்பாடுகளிருந்து தெளிவாயிற்று.



நடிகர் திலகத்தின் நடிப்பும் கலைத்திறனும் ஆற்றலும் ஒரு முகமாக எங்களைக் கவர்ந்து விட்டதே என்ற நிலையிலிருந்து சற்று வேறுபடுத்திக் காட்டுவதும் இத்தொடரை முழுமைப்படுத்த உதவும் என்ற எண்ணத்திலேயே திரு. வைத்தியநாதனின் விமர்சனப் பார்வையை இங்கு இணைத்துள்ளேன். இன்னும் பல வைத்திய நாதன்கள் எம்மத்தியில் வாழலாம். அவர்கள் சிவாஜி பற்றிப் பேசலாம், எழுதவும் செய்யலாம். ஆனால் எந்த விமர்சகராலும் சிவாஜியைப் போற்றி எழுதாமல் இருக்க முடியாது.

சாச்சாத் அந்த 'வைத்தியநாதக்' கடவுளே இவருடைய நல்ல இரசிகர்களுள் ஒருவராக இருப்பார் என்று நம்புகிறேன்.


எனவே தான் கடந்த அரை நுற்றாண்டு காலமாக இந்த நடிப்பு இமயத்திற்கருகில் எவருமே நெருங்காமல் இருக்கிறது.

ஆனால் ஒரு உண்மையை கமலின் 'ஹேராம்' மூலம் புரிந்து கொண்டேன். சிவாஜி அவர்களிடத்துப் புதைந்துள்ள பாவிக்கப்படாத திறமைகளை நமது கமல்; தான் எடுக்கும் குணச்சிரப் பாத்திரங்கள் மூலம் வெளிக் கொண்டு வருகிறார். கமலுக்குள் ஒரு சிவாஜி ஒளிந்திருக்கிறார்.

*இரண்டு ஆண்டுகளாகத் தொடரும் இக் கட்டுரைத் தொடர் அடுத்த இதழுடன் நிறைவு பெறுகிறது.*

# 21ஆம் நூற்றாண்டில் கணணி இல்லாமல் மனிதன் வாழமுடியுமா?

-ராஜா சொக்கலிங்கம் raja@systemsplus.net
Computer Consultant




## பகுதி 8

### உலக வலை (Internet)

Computer தனி மனிதனுக்கு உபயோகமாக வந்த முதல் சுற்றில் சில File களை சேமித்து (Save) வைக்கவும், வடிவமைத்து அச்சடிக்கவும் சில கணக்கீடுகளை துல்லியமாக செய்யவும் மட்டுமே பயனாக இருந்தது. ஆனால் அதன் பின் ஒன்றுக்கு மேற்பட்ட கணணிகளை இணைத்து ஒரு கூட்டு குடும்பமாக பல விடயங்களை ஒன்றுக்கொன்று பரிமாறிக் கொண்டு வேலை, செய்த Network, Internet காலத்தில் கணணியின் பயன் விஸ்வரூபம் எடுக்க ஆரம்பித்தது. இந்த சமயத்தில் அது தனி மனிதனுக்கு மட்டுமல்லாமல் சிறு சிறு தொழில்களுக்கும் பயன்பட ஆரம்பித்தது.

Internet என்று சொல்லப்படும் இந்த புதிய யுக்தி (Technology) கணணிக்கு வந்ததும் எதிர்பார்க்க முடியாத ஒரு சக்தியை கணணி உலகம் பெற்றது. கணணியின் உபயோகம் பல எண்ணில் அடங்கா மடங்கு உயர்ந்தது. இந்த Internet தொழில் நுட்பம் முதலில் இராணுவ செய்திப் பாதுகாவலுக்கும் செய்திப் பரிமாற்றத்திற்கும் பயன்படுத்தப்பட்டது. இதன் பின்பு தான் அது கல்விச் சேவைக்காக பல்கலைக் கழகங்களுக்கு கொடுக்கப்பட்டது. அதன் பின்பு இன்றைய பொது மக்களுக்கு மிக சாதாரண உபயோகங்களுக்கு கூட பலன் உள்ளதாக இருக்கின்றது.



இன்றைய மொத்த கணணியில் 80 முதல் 90 சதவீதம் Internet வசதி உள்ளதாகத் தான் இருக்கிறது. இன்று உலகில் சுமாராக 150 நாடுகளில் 8 கோடி பேர் Internet ஐ கணணி மூலம் பயன்படுத்தி கொண்டு இருக்கிறார்கள். அவர்களில் நீங்களும் ஒருவர். இந்த எண்ணிக்கை ஒவ்வொரு நாளும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. மின் அஞ்சல் (Email), இணைப்பக்கங்கள் (web page) இவை இரண்டும் இரு பிரதான Internet இன் உபயோகங்கள். இதன் உண்மையான தாக்கம் உலக உருண்டை உங்கள் மேசை மேல் கணணி உருவத்தில் காத்திருக்கிறது உங்கள் முன். Internet ஐ பொறுத்த வரை நாடுவிட்டு நாடு என்பது உள்ளூர் தொலைபேசிபோல் (logal call), வேண்டுமானால் இக்காலத்தில் கிரகம் விட்டு கிரகத்தை (Long distance) என்று எடுத்துக் கொள்ளலாம்.

நீங்கள் உங்கள் உபயோகத்திற்கு ஒரு e-mail வைத்திருப்பது மிக அவசியம். அதற்கு உங்களுக்கு ஒரு கணணி வேண்டுமென்ற அவசியமில்லை. அல்லது ஏதோ ஒன்றை செலவழிக்க வேண்டுமென்ற அவசியமில்லை. இலவசமாக கொடுக்கப்படுகின்ற எவ்வளவு e-mail களில் ஒன்றை எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். இந்த இலவசத்தில் உங்களுக்கு மிகப் பெரியது என்னவென்றால் ஒன்று அது நிலையானது (நீங்கள் எந்தக் காட்டில் அல்லது எந்த முகவரியில் குடியிருந்தாலும் மாறாததொன்று) இரண்டாவது உலகத்தில் நீங்கள் எங்கு சென்றிருந்தாலும் அங்கு கூட உங்களுடைய e-mail கடிதங்களை பெறமுடியும்.

உங்களுக்கு என்று ஒரு இணையப்பக்கம் வைத்திருப்பது இக்கால கட்டத்தில் தேவையான ஒன்று. ஒரு சிறு தொழில் செய்யும் ஒருவர் அல்லது பதவியில் இருக்கும் ஒருவர் தன்னைப் பற்றிய சில குறிப்புகளை (தொலைபேசி இலக்கம், முகவரி போன்றவை) தன்னுடைய Visiting Card இல் பதித்து கொடுப்பது போல உங்களைப் பற்றிய முழுவிபரங்கங்களையும் ஒரு இணைப்பக்கத்தில் வைத்திருப்பது உலக மனித இன கருத்துப்பரிமாற்றத்திற்கு இன்றியமையாது. இந்த இணைப்பக்கத்தின் மூலமாக உங்கள் எண்ணத்தில் வளரும் சிறந்த கருத்துக்களை கவிதைகளை, செய்திகளை எடுத்துச சொல்லலாம் அல்லது இந்த இணைப்பக்கத்தின் மூலமாக ஒரு தொழிலையே செய்யலாம் அல்லது செய்யும் தொழிலை விரிவுபடுத்தலாம். இன்னும் எண்ணில் அடங்கா உபயோகங்கள்.

எனது கணக்குப்படி ஆண்டு 2005 இல் ஒவ்வொரு பத்து வயது மாணவ, மாணவிகள் கூட தனக்கென ஒரு இணைப்பக்கத்தை வைத்திருப்பது உறுதி. அதனால் தான் சொல்லுகிறேன் அந்தக் காலகட்டத்தில் உங்களுக்கு இந்த Internet தொடர்பு இல்லாமல் இருந்தால்

நீங்கள் எந்த ஒரு மனிதனாலும் மதிக்கப்படமாட்டீர்கள்.
அடுத்த இதழில் இந்த இலவச Internet எடுப்பது எப்படி, இணைப்பக்கங்கள் செய்வது எப்படி போன்ற விடயங்களைப் பார்ப்போம்.

இன்றைய காலகட்டத்தில் உங்களுக்குத் தேவையான இணையங்கள்

www.eelam.com
www.tamilcanadian.com
www.yarl.com
www.eelanation.com
www. tamilnet.com
www.tamilweb.com
www.eelamweb.com


(தொடரும்)

**OHM** INFOR SYS CONSULTANTS

* CONSULTING * TRAINING

**COMPUTERS AND ON-LINE TRADING**





**THE COURSE IS SPECIALLY DESIGNED TO EDUCATE AVERAGE AND ORDINARY people to understand the power of home computers in On-Line trading. Training sessions are scheduled for weekday evenings or on Saturday morning.**

- You can start with few hundred dollars.
- You decide how often you want to invest. (Daily/Weekly/Monthly/Whenever you like)
- Understand your investment style.
- Where to get the timely information without making any monthly or annual fees.
- How to protect your hard-earned money.
- How to get started without paying too much to brokers.
- Understand the basics before trading.

**Learn more in our course overview on May 4th or 5th at 7:30 p.m. or Saturday May 06, 2000 at 10 a.m. Limited seating at our training centre.**

To reserve your seat for the course overview call OHM Infor Sys Consultants @ (416) NET 8444. (416) 638-8444.

**Training Location:** 1315 FINCH AVENUE WEST, SUITE 127, NORTH YORK, ONTARIO, M3J 2G6
**Tel. (416) 638-8444 / (416) 569-5810**
**Fax: (416) 638-0688**

## உலக நாடுகள் வரிசையில் - ஆர்ஜென்தீனா (Argentina)

(1ம் பக்க தொடர்ச்சி)

**சமயம்:** ரோமன் கத்தோலிக்கர் - 90% கிறிஸ்தவர் - 2%
யூதர் - 2% ஏனையவை - 6%

**இனத்தவர்கள்** - வெள்ளை நிறத்தவர்கள் - 85% ஏனையோர் - 15%

இருபத்தி மூன்று மாகாணங்களை கொண்ட இந்நாட்டில் ஜனாதிபதி, உப. ஜனாதிபதி, மந்திரிசபை என்போர் நிறைவேற்று துறையின் அதிகாரத்தில் உள்ளவர்கள் ஆவார்கள்.

சட்டமியற்றும் துறையாக மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட மேல் சபை, கீழ் சபை என் இரு சபைகள் இயங்கி வருகின்றன.

மந்தை வளர்ப்புக்கும் விவசாயத்திற்கும், கைத்தொழில் அபிவிருத்திக்கும் மிகவும் இயற்றை வளமுள்ள நாடு ஆர்ஜென்தீனா ஆகும். ஆனால் பல காலமாக அதிகாரத்தில் இருந்தவர்களின் தவறான பொருளாதார திட்டங்கள், ஊழல் நிறைந்த நிர்வாகம் ஆகியவற்றினால் பொருளாதாரம் மற்ற நிலையில் சென்று, நாட்டில் பணவீக்கமும், வெளிநாட்டு கடன்களும் அதிகரித்து கொண்டே சென்றது. இத்தகைய பாதிப்பினால் சர்வதேச ரீதியில் இந்த நாட்டுக்கு கடன் வழங்கும் நிலையில பயங்கர பாதிப்பு ஏற்பட்டது. ஆனால் 1989ம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட புதிய ஜனாதிபதியின் கீழ் புதிய பொருளாதார திட்டத்தினால் நாட்டின் பொருளாதாரம் சற்று வளர்ச்சி பாதையில் சென்று கொண்டுள்ளது.

இங்கு காலநிலை வெப்ப நிலையில் இருந்து குளிர்காலம், மழைகாலம் வரை காணப்படும் நாட்டின் தெற்கு பகுதி குளிர் பகுதியாகவே இருக்கும்.

*-மாலினி பஞ்சலிங்கம்*

# infoTamils Online

**தொழில்நுட்ப வளர்ச்சியின் காலத்திற்கேற்ப உங்கள் வர்த்தக நிறுவனங்கள் பற்றிய விபரங்களை internet ல் இலவசமாக விளம்பரம் செய்துகொள்ள இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.**

## www.infotamils.com

If you are a business-owner wishing to attract that special Tamil market, take the opportunity NOW to advertise with infoTamils Online. Need help moving your company into the exciting and profitable world of Internet marketing?

**For movies show times visit infoTamils Online**


Contact infoTamils Online Today!
http://www.infotamils.com
Toll free: 1 888-257-2891
e-mail : info@infotamils.com

# SABONA & GIFT

உங்கள் நடமாடும் தொலைபேசிகளுக்கான சேவையை மிக மிகக் குறைந்த விலையில்
**CELL U TECH** இனூடாக செய்து தருகிறோம்.
***ROGERS AT&T, BELL MOBILITY, FIDO, CLEAR NET*** ஆகிய தொலைபேசிகளையும் பெற்றுக் கொள்ளலாம்.
***ERVAMATIN, SABONA*** காப்புக்கள் ஆகியவற்றையும் பெற்றுக்கொள்ளலாம்.

முடி உதிர்வை தடுத்து மீண்டும் வளரச் செய்ய....

**ERVAMATIN**



3238 Eglinton Ave. E
Scarborough இல்
அமைந்திருந்த
எமது அலுவலகம்

**2602 B Eglinton Ave. E**
**Scarborough இற்கு**
**மாற்றப்பட்டுள்ளது.**

எமது தொலைபேசி இலக்கங்கள்
மாறவில்லை

**(416) 264-8787**
**(416) 269-8151**

e.mail: sabona@home.com

## சூரியக்குடும்பம்31 விண்வெளி

தருபவர்- கனி

இன்று செவ்வாய் பற்றிப் பார்ப்போம். சூரியக் குடும்பத்தின் நாலாவது பாறை உலகமாகிய செவ்வாய் பற்றி எமக்குத் தெரிந்தது என்ன? செவ்வாய் என்றதுமே எமது நினைவில் வருவதெல்லாம் செவ்வாய் தோசம். ஏழில் செவ்வாய், இரண்டில் செவ்வாய் கலியாணத் தாமதம் இது போன்றவையே. வான் வெளியில் மற்றைய கிரகங்களை விட வித்தியாசமாய் சென்னிறத்தில் வலம் வரும் இந்தக் கிரகம் அதன் நிறத்தின் அடிப்படையிலேயே பெயரையும் கொண்டுள்ளது. ஆதியில் சூரிய, சந்திர்களுக்கு அடுத்து நம்முன்னவர்கள் இனம் கண்டு கொண்டதும் இந்தச செவ்வாய் தான் என்பது எனது எண்ணம். அன்றைய கிரேக்கர்கள் செவ்வாயை தமது கோபத்தின் கடவுளாகக் கண்டு கொண்டார்கள் எனக் கூறுகின்றார்கள். விஞ்ஞான ரீதியாக இந்தச் செவ்வாயை நாம் அறிந்து கொள்வதற்கு முன்பதாக இச்செவ்வாய் பற்றி மனித இனம் என்ன என்ன கதைகளை, ஐயங்களைக் கொண்டுள்ளது எனப் பார்ப்போம்.

நவக் கிரகங்களில் ஒன்றாக இருக்கும் செவ்வாய் சோதிடத்தில் மிக முக்கியமான இடத்தைப் பிடிப்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றே. அதேபோன்றே கிரேக்க ஆய்வாளர்களினாலும் அதிகம் ஆரம்பத்தில் ஆய்வு செய்யப்பட்டதும் அவர்களின் கோபத்தின் கடவுளான இந்தச் செவ்வாயே. அது மாத்திரமல்லாது படித்தவர்கள் முதல் பாமரர்கள் வரை வியப்புடன் கதை கதையாய் கேட்டது, சொன்னது எல்லாம் இந்தச் செவ்வாய் பற்றியதே. இதன் அடிப்படையில் மனிதம் பொதுவாகக் கொண்டிருக்கும் சில கருத்துக்களைப் பார்ப்போம். சுமார் 4½ பில்லியன் வருடங்களிக்கு முன் தோன்றிய எமது பூமியில் ஆரம்பத்தில் உயிரினம் எதுவும் இருந்ததில்லை. பின்னர் படிப்படியான வேதியல் மாற்றங்களினால் சிறிது சிறிதாக உயிரினங்கள பூமியில் தோன்றின எனக் கூறுவர் சிலர். இவ்விதம் பூமியில் உயிரினம் தோன்றுவதற்கு முன்னரே செவ்வாயில் உயிரினங்கள் தோன்றிவிட்டன எனச் சிலர் கூறினார். மனித இனத்திற்கு ஒப்பான உயிரினங்கள் செவ்வாயில் தோன்றி வசித்திருக்க வேண்டும் என்கிறார்கள் அவர்கள். மேலும் ஒருபடி மேலே போய் ஏன் மனித இனம் கூட செவ்வாயில் இருந்து தான் பூமிக்கு வந்தது என்கிறார்கள்.

ஒரு காலத்தில் பூமியைப் போன்று இருந்த செவ்வாய் தொடர்ச்சியான காலநிலை மாற்றத்தினால் உயிரினம் வாழமுடியாத நிலைக்கு வந்து இன்று பாலைவனமாக, கட்டாந்தரையாக மாறிவிட்டது என்கிறார்கள். இக்காலநிலை மாற்றத்திற்கு சரியான காரணம் கூற முடியாத இவர்கள் சுமார் 10 மில்லியன் வருடங்களின் முன்னரேயே செவ்வாய் வெறுமையாகி விட்டிருக்க வேண்டும் என்கிறார்கள். தங்களது ஐயத்திற்கான காரணங்களையும் அவர்கள் கூறுகின்றார்கள்.

வான்வெளியில் பறந்து செவ்வாயைப் படம் பிடித்து அனுப்பிய விண்கலங்களின் செய்தியின் அடிப்படையிலேயே தமது ஐயங்களை அவர்கள் தந்திருக்கின்றார்கள். விண்கலங்கள் புவியிற்கு அனுப்பி படங்களை ஆய்வு செய்கையில் செவ்வாயில் பல பெரிய கால்வாய்கள் இருந்தது போன்ற அடையாளங்கள் காணப்பட்டன. இவை ஒரு காலத்தில் செவ்வாயில் பெரிய நீர் நிலைகள் இருந்திருக்க வேண்டும் என்பதை உறுதிசெய்கின்றன என்றார்கள். அங்கு வாழ்ந்த உயிரினங்கள் - மனிதர்கள் உயர் புத்தி ஜீவிகளாக இருந்து அவர்களது உயர்ந்த தொழில் நுட்ப வேலைப்பாடுகளின் விளைவாக செவ்வாயின் சூழல் மாசடைய இறுதியில் 'Green House Effect' போன்ற விளைவுக்குள்ளாகிய செவ்வாய் உயர் வெப்பநிலையை அடைந்து உயரினம் வாழத் தகுதியற்று - நீர் நிலைகள் வற்றி - பாலை நிலமாகி விட்டது என்கிறார்கள்.

விண்கலங்கள் அனுப்பிய படங்களில் ஒன்று மிகப்பெரிய மனிதத் தலை போன்ற அமைப்புடைய ஒரு பாறை. படத்தை மிக நுணுக்கமாக ஆராய்ந்த ஆய்வாளர்கள் அந்த மனிதத் தலை போன்ற பாறையானது இயற்கையில் அமைந்திருக்க முடியாது. அதனை யாராவது செதுக்கி இருக்க வேண்டும் என்கிறார்கள். அதன் படி அங்கு மனித இனம் அல்லது மனித இனத்திற்கு ஒப்பான ஒரு உயிரினம் இருந்திருக்க வேண்டும். கால மாற்றத்தால் தாம் அழிவதை அல்லது அழியப்போவதை உணர்ந்த அவர்கள் தமது ஞாபகச் சின்னமாக, எதிர்காலத்தில் வேறு கிரகங்களில் இருந்து வருபவர்கள் அல்லது ஆய்வு செய்பவர்களுக்கு ஒரு செய்தியாக இதனைச் செதுக்கியிருக்க வேண்டும் என்கிறார்கள். இது போன்ற மிகப் பெரிய மினிதத் தலைச் சிலையை பாறையில் வடிப்பதற்கு மிகப்பெரிய அளவிலான தொழில்நுட்ப அறிவினை அவர்கள் கொண்டிருக் வேண்டும் என்பதும் அவர்களது கருத்து.

சரி இவ்வளவு அறிவுள்ள இனம் செவ்வாயில் இருந்திருக்குமாயின் இன்று நாம் மற்றைய கிரகங்களை ஆய்வு செய்வது போன்று அவர்களும் ஆய்வு செய்திருப்பார்களே? அதன் விளைவு என்னவாயிருக்கும்? நீங்கள் கேட்பது தெரிகிறது! மறுமுறை சந்திக்கும் போது அதற்கு என்ன விளக்கம் கொடுக்கிறார்கள் எனப் பார்ப்போம்.


RAAJ WATCH WORK



சகல விதமான மணிக்கூடுகளும் (Watch & Clock) குறைந்த கட்டணத்தில், உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் திருத்திக் கொள்வதற்கு நகரில் நாட வேண்டிய ஸ்தாபனம்.
NATHAN ☎: (416) 265-5580
2885 LAWRENCE AVE. EAST, BRIMLY/ LAWRENCE (Close to Biway)

வீடுத் தயாரிப்பு - சிற்றுண்டிகள்

சுத்தமான வீட்டில் செய்யும் பலகாரங்கள், சிற்றுண்டிகள், முட்டை மா, திருமண வீட்டிற்கு தேவையான பலகாரங்கள், எள்ளுப்பாகு, பல்லுக் கொழுக்கட்டை, பருத்தித்துறை வடை, சீனி அரியாரம், பால் றொட்டி சகல பலகாரங்களும் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டத் தரப்படும். நியாயமான விலை.
தொடர்புகளுக்கு :286-5026

ELECTRICAL REPAIRS

உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிசன்கள் றேடியோக்கள் வீடியோக்களை குறைந்த செலவிலும்,சிறந்த முறையிலும் குறிப்பிட்ட நேரத்திலும் திருத்திக் கொள்ளநாடுங்கள்
முருகதாஸ் - ☎ 261-6883

J DAYCARE

- 7 மாதம் தொடக்கம் 6 வயதுச் சிறார்களுக்கு சிறந்த பராமரிப்பு
- ECE தகுதி பெற்ற நடத்துனர்
- TAX RECEIPT வழங்கப்படும்
- காலை 7:00 மணி - மாலை 6:00மணிவரை
- மாலை 6:00 மணி - மாலை 10:00 மணிவரை

1 Hr. - $3.00
Day - $15.00
Week - $60

